முருகன் கீர்த்தனைகள்

2087
154:095
4 - FEB 1927



ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,
—-ஸ்ரீரங்கம்-—

Q26:417
N27
128944

முருகன் கீர்த்தனைகள்.

கணபதி வணக்கம்.

கந்தனுக்கு மூத்தகரி முகனடிமலரை
எந்தநேரமும் எற்றியே போற்றினேன்
வந்திட்டவினைவிலக வழியவனுமளித்திட
சிந்தைத்துயர் நீக்கி சிவகுருவினருள் பெருகவே

முருகன் வணக்கம்.

விடையேறு மெம்பிரான் விரும்பியே பெற்றெடுத்த
கடைகண்ணருகுமந்த கந்தபிரான் பாதமலரை
அடையவே யெண்ணி அன்புடன் பணிந்திட்டேன்
தடையாவும் நீக்கி தண்ணருள் புரிவனே

---

1 ஆறுதலையான அரன் அகமகிழ்ந்தமர்ந்திட
அரியதொரு ஜோதியாயுதித்து
ஆறுபொறியாகியே அக்கினியின்கையமர்ந்து
அவனேற்கவலிமையற்று
ஆறுஇடமாக்கவே அழகுமிகு குழவியாய்
அதிலமர்ந்தாடிடவே
ஆறுகன்னியர் நோக்கி அகமகிழ்ந்தன்புடன்
அணைத்துப்பாலூட்டிட
ஆறுமுகமொன்றாக அமர்ந்திட்டு அன்னைமடி
அமிர்தமாம் பாலுமுண்டு
ஆறுதலம் நிறைந்தெங்கும் அகண்டிதாகாரமாய்
ஆனந்தஜோதியாகி

ஆறெனப்பாய்ந்தோடும் அன்புநீர் கண்சொரிய
அகமுருகும் அடியரெதிர்
ஆறுமுகத்தோடு மயிலேறியேவேலேந்தி
வருமுருகனடிபோற்றி

2 முகம்ஆறு கண்டவுடன் மூன்றுலகும் களிகூர்ந்து
போற்றி செய்தடியார்கள்
முகம்பார்க்கும் பொருளீதென அகம்தேறிநிற்க
அழைத்திடும் ஓர்மாது
முகம்நோக்கியருளீந்து முடிவாக தனைநாடிஉயிர்
நீக்கிடுமருணகிரியின்
முகம்பார்த்தருள் தந்து நன்முறையையறியாநற்
கீரனும் கலங்கஅவன்
முகம் நோக்கியருள் ஈந்து மூன்றுலகு மழித்தவெஞ்
சூரனுயிர்பதைத்திட
முகம் பார்த்திரங்கியே மயிலாக்கியமர்ந்திட்ட
தயாநிதியே உந்தன்
முகம் பார்க்கவாடியே இவ்வுலகில் தவித்திடும்
பேதையாமெந்தன்
முகம் பார்த்திரங்கியே அருள் புரியஇதுசமயம்
நின்னடிமலர்போற்றி

3 துணையானபொருள் நமக்குண்டுஎனவெங்கும்
துதித்துமே மகிழ்வடைய
துணைநமக்குண்டு எனஎண்ணியே அமரர்கோன்
எழிலுடன்பதியையாள
துணைநமக்குண்டு எனஎழில்பெற்றசக்திகளும்
இருபுறம் வீற்றிருக்க
துணைநமக்குண்டு எனயோகமுதல் ஞானியரும்
அமிர்தமதி அடையவெண்ண
துணைநமக்குண்டு எனதுணிவுடன் பக்தரும்நின்

தொண்டுமே புரிந்திட
துணையான புனைமலர் தோன்றிடயிக்கலியிலும்
குருமலை விளங்கும் பாத
துணைநம்பியானுமேயித் தொல்லுலகில் நிற்கின்றேன்
தூயவடிவேலாசே
துணைவேறுமுளதோநின் மனமுமறியாததோ
நின்சரணம்போற்றி

ஆறுமுகம்துணையென அநுதினம் பணிந்திட்டேன்
வேறுமுகமுண்டோ வேலவனே யெனையாள
ஏறுமுகம் கொண்டயென் வினைகள்தீர்த்திட்டு
தேறுமுகமாகநான் நின்திருவடியளித்திடுவாய்

அந்தாதி.

1 பாருற்று வந்தகம் பவவினைகள் தீர்ந்திடவே
பேருற்று நாமும் பிறப்பற்று அமர்ந்திடவே
சீருற்ற குருமலையின் சிவகுருவைய நுதினமும்
கூருற்றுப்பணிந்திடுவாய் கொடுமை செய் யென்
மனமே

2 மனத்துயரறிந்திட்ட மால்மருகா என்மனநிதியே
இனத்துணையாகியே யென்குடியாளும் வேலா
வனத்திடையமர்ந்தாலும் வாழ்வதில் நொந்தாலும்
கணம்பிரியேன் நின்கால் விலகேன் நின்னடிமையானே

3 யானேதுமறியேன் வானோர்தலைவா வந்திரங்கி நீ
தானேயளிப்பாய் தழைத்து நானுய்திடவே
ஊனேனறுமுடற்சுமை உவட்டியே வெறுத்திட்டேன்
வீணேயலையாது விருப்பியே யருள்தருவாய்

4 தருவாகிநின்றெங்கும் தற்காக்கும் தயாபரனே
உருவாக்கி யென்னையும் உலகுவிட்ட எழில் வேலா

குருவாகி நீயுமெதிர்வந்து ஆளாவிட்டால்
மருவழியுண்டோ பெருவினையேன் தப்பிடவே

5 தப்பற்ற பொருளாகி யெங்கும் தானாகி தனியாகி
ஒப்பற்ற உருவாகி உயர்பதமாம் குருவாகி
இப்பற்று நீக்கியே அடைவோர்க்கு அருளாகி
செப்பற்ற சிவமாகி சீர்பெருக வமர்ந்திட்டதே

6 அமர்ந்திட்ட அடிமலரை அகமுருகி யனுதினமும்
மலர்ந்திட்ட பூச்சாற்றி மனமுருகிப் போற்றுது
உலர்ந்திட்ட மனமாகி ஓடியே உழன்றெங்கும்
தளர்ந்திட்ட வென்மீது தயவுசெய் வேலவனே

7 வேலேந்தி விளையாடும் வீரவடிவேலரசே
பாலேந்தியுண்ட பவளவாய் மணம் மாறுப்பாலா
வாளேந்தி வந்திட்ட சூரனுடல் மாறுகநின்
தாளேந்தி நின்றிட தண்ணருள் வகுத்திட்டனையே

8 இட்டமுடன் நீயொன்று செய்திட எதிருமுண்டோ
திட்டமுடன் தேவர்க்கும் திடனளித்த தேவா
சட்டமுடன் தந்தைக்கும் சத்குருவான செல்வா
நட்டமுடன் நானழியாது நல்லருள் தந்திடுவாய்

9 தந்திடுவாய் நின்னருள் வெள்ளத்திலோர் துளி
சிந்திடுவாய் சிறியனேன் சிந்தைத்துயரற
மூந்திடுவாய் முருகாவென்றமொழி குழறுமுன்
வந்திடுவாயென்முன் வாழ்காற்றொடுங்கு முன்னே

10 முன்னே ஓர்தரம் முருகாவென்ற மாதுகளிக்க
பின்னே வந்து நீயும் பேரருள் உதவினாய்
அன்னே அவ்வருள் அடியேனுக்கெங்கேதான்
என்னே ஈதெல்லாம் எந்தன் விதிவசமோ

11 வசமாகியடியார்கள் வாழ்வாகிவைப்பாகி
நிசமாகி யெங்கும் நிகரற்ற நல்கரும்பின்

ரசமாகி ஞானரவியாகி மதியாகி நின்றான்
தசமாகி பிறவி பிறந்திட்டோன் மருகன்தானே

12 தானாகி தற்பரமாய் தனிசுடரா யொளிர்
கோனாகியெங்கும் குளிர்ந்தாண்டு கருணைமுகில்
வானாகிவந்து பொழிமழையாகி அடியரிதயத்
தேனாகிநிற்கும் திருமுருகனடிமலர் போற்றி

13 போற்றி செய்தடியார்கள் பொன்னடியை சூழ்ந்தி
ருக்க
ஏற்றிசெய்தேயானும் ஏறியேவந்த மார்ந்திடாது
காற்றிடைபட்டதோர் துரும்பெனசுழன்றுலகில்
நீற்றிடுமுடல் நம்பி நிற்கின்றேன் யாதுசெய்வேன்

14 யாதுசெய்வேன் முருகா வாது செய்மனதோடு
தீது செய் வழிகாட்டி திகிற்படவினை யேற்றி வீண்
போததுவும் தள்ளிற்றந்தோ பொருந்தியீடேறாது
மாதுயான் கலங்குகின்றேன் மன்னித்து வந்தருள்வாய்

15 வந்தருள்வாய் என்னரசே வர்ணமயில்மீதேறி
தந்தருள்வாய் தாளிணையையென் தாபங்கள் நீக்கிட
உகந்தருள்வாய் உன்னருளை உன்னடிமையீடேற
சொந்தருள்வாய் மலர்ந்தருளும் குகப்பெருமானே

16 குகப்பெருமான்குழந்தைப் பெருமான் ஆறு
முகப்பெருமான் முதல் பெருமான் முழக்கிடுஞான
சுகப்பெருமான் ஜோதிப்பெருமான் சொல்லுமென்
அகப்பெருமான் அடியார்க்கு நலபெருமான்தானே

17 தானேயென்றமரும் தன்மை கெட்டிடவு நீ
நானேயென்று என்னெஞ்சமர்ந்த நிலைகாட்டி
கோனேயென் குறையெல்லா நீக்கியொன்றாக
ஆனேனென்றமைய அருள் புரிந்தருளே

18 அருளேநிறைவாகி ஆறிரண்டு கண்ணாகிஞானப்
பொருளே தானாகி போதமாம் குருவாகிஉலக
இருளே நீங்கிட எழுந்த தோர்பாறுவாய்மாய
மருளேநீங்கிட இம்மலரடியமர்ந்திட்டதே

19 இட்டதோர் விதியதனை எண்ணியே அகமடைந்த
துட்ட நான்முகனை தொடர்ந்துமே சிறைசெய்து
விட்ட குறையாகாது விரும்பியே அத்தொழிலும்
சட்டமாய் செய்திட்டசரவண ஷண்முகனே

20 ஷண்முகனே நின்சரணம் சந்ததமும் மெண்ணுபவர்
மண்முகநோக்குவரோ மதி கெட்டழிந்திடவே
விண்முகநோக்கி விழியிரண்டும் குறிப்புணர்த்தி
உன்முகமாகடுவர் உன்னொளியிலீடுபட்டே

21 ஈடுபட்டே யடியார்கள் இன்முற்றிருக்கவு முருகா
பாடுபட்டதரியாத பாழ்மனக்குரங் கதுவும்
நீடுபட்டவினையேற்றி நிற்கின்றதென்செய்வேன்
கூடுவிட்டாவிபோமுன் ஆண்டருள்வாய்குகனே

22 குகனேயென் குலதெய்வமே குமரவடிவேலா
அகமேவியமர்ந்திட்ட அரும்பொருளே என்நிதியே
சுகமாகியானும் சோர்வெல்லாம் தீர்ந்திடவுன்
முகமாறும் காட்டியோர் மொழியது கூறுவாய்

23 கூறுவாய் முருகா அதைக்கொண்டு நானுய்திட
ஏறுவாய்மயில்மீது என்னெதிர்வந்திடவே
கீறுவாய்பாம்பணிசிவகுமார நீயுமென்னை
தேறுவாயென்று திடனளித்தாண்டிடுவாய்

24 ஆண்டவனாயெங்கிலும் காத்திட தானமர்ந்து
தாண்டவம் புரிகின்ற தலைவர்க்கும் தலைவனாய்
வேண்டிடுமடியாரெதிர் விளங்கிடும் குருவுருவாய்
நீண்டபவநீக்கியருள் திருமுருகனடி போற்றி

1 காட்டுக்கெரித்திட்டகலை மதியினழகுபோலிவ்
வீட்டுக்குழைத்து வீணனேன் அந்தோயான்
நாட்டுக்கு சுமையாகி நல்லோர்க்கும் பகையாகி
எட்டுக்கும் அடங்கிடாதிருப்பதுமவிதிச்செயலோ

2 இலவுகாத்திடும் கிள்ளையின் கதையாகிவாழ்வும்
உலவிடும் பேயாகி உடலுமோர் சுமையாகி
நலமொன்றுமின்றி நாற்திக்கும் அலைந்துழன்று
பலனின்றி மாள்வதற்கோ பகர்ந்திட்டாய்வேலவனே

3 விழலுக்கிரைத்தநீருகி வெந்தாபவாழ்வதுவும்
தழல்கண்டபுழுவாகி தவித்திடவோர் கதியுமின்றி
கழலிணை சரணடைந்தேன் காப்பதுன் கடனன்றோ
நிழலினையளிக்களனை நினைத்தருள் வேலவனே

4 உள்ளெல்லாம் செந்தீயாய் உணர்வதுவும் பஞ்சாகி
கள்ளமனம் காற்றுகி கனல்வேகம் எங்குமாகி
வள்ளலே அருள் வெள்ளம் வழங்கவேவந்தடைந்தேன்
தள்ளுலேயாகாது நின்தாளிணை தந்திடுவாய்

1 சொல்லளவேயாக்கியென்னை சுகமுற்றுமேலேற
எள்ளளவு மிரங்காது இருத்தலும் நீதியோ
வள்ளலே உன்னடிமைவாடுதலேயடைந்திட்டால்
கள்ளவுலகமும் கைகொட்டிநகைக்குமன்றோ

2 அன்றேஆமோவெனும் சங்கைக்கிடமின்றி
மன்றுடுமன்னர் செல்வா மன்னித்து வந்தருள்வாய்
கன்றேகதறகனிந்துவரும் தாய்போல் நீயும்
இன்றேயெனக்கின்பம் இரங்கியளித்தருளே

3 அருளேவருமோவென்றையுறு நெஞ்சினுக்கு
வெருளேலென்றுநீயும் விரைவுடனெதிர்ப்பட்டு
இருளேநீக்கியென் ஏக்கமெல்லாம் தீர்த்திடவே
மருளேநீக்கிநிற்க மனம்அடங்கும் மாறுதலே

4 தலமாறும் கடந்துநின்ற தத்பதவொளியமா
முகமாறும் காட்டிநன் முறையதுவும் கூறாய்
கலம்மாறுமுன்னே கந்தா வந்திரங்கிநீயும்
அகம்மாறச்செய்தே ஆனந்தம் தந்திடுவாய்

5 இடுவாயோ எழிலடியை என்முடிமேல் சூட
விடுவாயோ அருள்வெள்ளம் வெந்தாபம் தணித்திட
படுவாயோ கண்ணிரக்கம் பாவியின் துயர்பார்த்து
நடுவாயோ ஞானவிதை நானற்றிருந்திடவே

6 நானற்றிருந்திடவே நாட்டமாம் பேருமற்று
தானற்று தவிப்பற்று தந்திடும் வெந்தாபமாம்
ஊணற்று உருவற்று உறவானபகையுமற்று
வீணற்று வினையற்று வெளிப்படும் சுகோதயமே

7 அயமேயிழுக்குமக்காந்தத்தின் தன்மைபோல் நின்
வயமேயிழுத்தென்னை வலியவேயாண்டிடுவாய்
பயமேதீர்த்தருளி பார்க்குமிடமெங்கு நின்
மயமேயாக்கிடுவாய் மயிலேறும் பெருமானே

8 மானேர்விழிமங்கை யரிருபங்கிலுமிருக்க
வானேவணங்கு சூரமயிலுநின் தாளிருக்க
கோனேநின்கையொளிர் வீரவடிவேலிருக்க
நானேனஞ்சுவேன் நமன்கைக்கயிறுக்கே

9 கயிறுக்கே கலங்கிடுவர் காலமெல்லாம் வீண்
வயிறுக்கேயலைந்திடுவர் வல்வினை மேற்கொண்டு
பயாளவன்னம் பசித்தோர்க்கீயார்பாற்
உயிர்போகினு முறவுகலக்காதே உத்தமனே

10 உத்தமனே உன்மனமிரங்கியே ஏழைக்கு எள்
ளத்தனை அருளளித்திடுவாய் அகம்குளிர்ந்திடவே
அத்தனே உனையன்றி ஆருண்டெந்தனுக்கே
சித்தமுமறியாததோ சிறியேனையாண்டிடுவாய்

ராக—ஹரிகாம்போதி.

பல்லவி.

எத்தனை நாட்செல்லுமோ-ஏழையெனக்கருள்புரிய

சரணங்கள்.

1 அத்தனே உன்னடிமலரை-அநுதினமும் பணிந்து நின்று
நித்தமும் நின்னருளைநோக்கி-நெஞ்சம் கலங்குமென் தனுக்கு (எத்)

2 வேலனேயுனைப்பணிபவர்கள்-வேதனையுமடைவரோ
காலமுமாகுதேயெந்தன்-கந்தா நீயும் அறியாயோ (எத்)

3 இந்தச்சடலம் நீங்கிடிலோ-எந்தவிதமாகிடுமோ
சொந்தமான கந்தனேநீ-அந்தமாக ஆதரிக்க (எத்)

ராக—பியாக்

பல்லவி.

எப்பவருவாயோ—இரங்கியெந்தன்முன்னே

சரணங்கள்.

1 கணம் கணமாய்நோக்கி-காத்திடும்பேதையை
இனமாகவந்தே-(நல்)-எழிலடியளித்திட (எப்)

2 ஆறுதல்தர நல்ல-ஆறுமுகவேலோனே
மாறுதலாமுன்-(ஜென்ம)-மலாடியளித்திட (எப்)

பல்லவி.

வாவாவாமுருகா—திருமால்மருகாயிங்கு

சரணங்கள்.

1 ஐயா வேல்பிடித்தகையா அரன்மகிழ்
பையா நிலைபெறுமெய்யா நீயிங்கு (வா)

2 வேலா உமைமகிழ்பாலா அடைவோர்க்
கநுகூலா அருமறைமூலா ஆதரிக்க (வா)

3 பாவியேனுடலா விசோருமுன்
கூவிடும் குரல் கேட்டு தாவியே (வா)

4 அஞ்சுதலையோர்க்கும் மிஞ்சிநிற்கும் நாதா
பஞ்சையுடன் வாதா பாதமலர் தா (வா)

5 வெய்யவினைகளுநைய எந்தனுக்கே
ஐய ஒருவழிமெய்ய ஓதிடவே (வா)

6 ஏழையெந்தனையும் தாழவிட்டிடாது
ஆழ அருள் செய்து வாழவைத்திட (வா)

ரா—காவடிச்சிந்து. வள்ளிக்கிசைந்த முருகேசன்

1 வெள்ளியங்கிரிவாழும் நாதன்-விரும்பியேபெற்றெடுத்தபாலன்-புள்ளிமயிலேறி வள்ளி தெய்வானைகூட வருவருவோன்-அருள் தருவோன்

2 ஆறு முகமமர்ந்த நாதன்-நல்ல ஆறுதலளித்திடும் தேவன்-மாறுதலைப்பட்ட சூரனுடல் மாறச்செய்தோன்-வேல்எய்தோன்

3 முருகா வென்றழைத் திட்டமாது-உள்ளம் உவந்திட அப்போது திருவுள்ள மிரங்கியே காமளித்திட்டதொருஅன்பன்-அடியர்நண்பன்

4 திண்டுமுண்டுரை செய்தகீரன்-திகிற்பட சிறையான நேரம் தொண்டவன் புரிந்திடகண்டு இரங்கியே காத்தோன்-ஞான மூத்தோன்

5 அத்தனுக்கும் குருவானசுத்தன்-அந்த அயன் தொழிலும் செய்தசித்தன் நித்தம் பணிபுரிபக்தியடியவரைக் காப்போன்-பாதம் சேர்ப்போன்

17894

ரா—மீனுக்ஷிரமணு.

வேலவனேயுனை-வேண்டியான் பணிந்திட்டேன்

1 நாலோடு இரண்டும் தாண்டி-பாலுண்டமர்ந்திட
மேலான உந்தனருள்-மேவியேவந்திட (வே)

2 காலோடுகால்வாங்கி-காலனெதிர்ப்படுமுன்
கோலானவேலேந்தி-குளிர்ந்தென்னையாண்டிட (வே)

3 மாலொடுமால்கொண்டு-மயங்கியானழிந்தே
மேலொடுகீழாகும்-பிறவியலையாது (வே)

4 ஐயொடுமெய்யும் சேர்ந்து-அறிவும் கலங்குமுன்
பையவே நீயும்வந்து-பார்த்தென்னையாண்டிட (வே)

5 கடமொடுமடமும்-கனவெனநீங்குமுன்னே
அடம்புரியாதுநீ-அருள் தந்தாண்டிடவே (வே)

ரா—ஆண்டிப்பண்டாரம்

ஆண்டவன் வந்தான் என்னையாளும் (ஆண்)

1 தன்னடிமையானவெனை தன்மனமிரங்கி யெண்ணி
அன்னைவாழுமிடமும் வந்து ஆனந்தத்தை அளித்தி
டவே (ஆண்)

2 பாதம்பணியுமெனை பார்த்திடவே தானிரங்கி
போதமளித்திடவே பொருந்தும் வேலைகைபிடித்த
(ஆண்)

3 காவியுடைதரித்த ஈசன் எங்குமேவிடும் ஸ்வயம்பிரகா
சன்
என் ஆவித்துணையுமான ஆறுமுகவடிவேல (ஆண்)

4 ஏரகப்பதியிருந்து என்னகமும் வீற்றிருந்து
தாரகமாகியெங்கும் தானளித்து தாங்கிகாக்கும்(ஆண்)

5 உருவாகி காணும் ஐயன் உணர்வாகி ஆட்டுமெய்யன்
குருவாகியென்னையாளும் குகப்பெருமானனதுய்யன்
(ஆண்)

6 சிவகுருவாகியந்த குருமலையில் வீற்றிருந்து
அவனியெங்கும் உயதிடவே ஆனந்தத்தையளிக்குநல்
(ஆண்)

ரா—மோஹனம்.

வேல்பிடித்தகையா—ஈதென்னவேடிக்கையோ ஐயா

1 கால்பிடித்தே கதறுமென்னை கண்ணெடுத்தும் பாருது
ஆல்குடித்த வாழ்வாக்கி அருந்துயர் விளைப்பதென்ன

2 காலமோ—கலியினது கோலமோ—ஏதேதுரைத்தா
லும்
இரங்கிடாகுதேது — மாதேதுசெய்வேன் மால்மரு
கோனே (வேல)

ரா—எதுகுலகாம்போதி.

பல்லவி.

3 ஈராறுகண்ணிலோர் கண்ணுயினுமென்மீது
இரங்கியேபார்த்திடாதே

அநுபல்லவி.

4 போாற்றிடையுதித்த பேராருளாளா
கூறுனவேல்பிடித்த குமரவடிவேலா

சரணங்கள்.

1 வாய்கொண்டுரைக்கபோமோ வாழ்வின்துயரங்கள்
நாய் படும்பாடுகள் நான்பட்டு கலங்குகின்றேன்
மாய்ந்திடமனத்துயர் என்மன்னுநீயிரங்கியே
பாய்ந்திட உன்னருள் பார்த்தென்னையாண்டிட (ஈ)

2 நான்படும் பாடுகள் நாதனேயறியாயோ
தானெடுத்துரைக்க வென்றால் தாங்குமோவையகம்
கான்படுகண்ணியின் மான்போல் கலங்குகின்றேன்
ஏன்படுகின்றாயென்றே என்னெதிர் வந்தாள (ஈ)

ராக—செஞ்சுருட்டி.

ஆறுமுகனேயுந்தன் அருளுக்கழகோ
நின்னடிமைபடும் துன்பம் உனக்கேபுகழோ

1 பாத தாமரையை பலகாலும் வணங்கு மென்னை
போதமளித்திடாது வாதனை செய்வதும் (ஆ)

2 காவியுடையிடையை கண்டே மகிழுமென்னை
ஆவிதவித்திடவே அலைந்திடச் செய்வதும் (ஆ)

3 மாலைபணிமார்பை மகிழ்வுடன் நோக்கு மென்னை
ஆலையிடு கரும்பாய் அவதிகள் செய்வதும் (ஆ)

4 வேல் விளங்கும் கையைவிரும்பியே துதிக்குமென்னை
மால்கொண்டமனமாக்கி மயங்கிட செய்வதும் (ஆ)

5 ஈராறுகண்களையே எனக்கருள் புரியுமென்றே
கூறுகநோக்குமென்னை கொடுமை அடைவதும் (ஆ)

6 நீறூர்ந்த நெற்றியதனை நிலையாகப்பணியுமென்னை
வேறாக்கியே யிந்தவேதனை செய்வதும் (ஆ)

7 உன்னடிமை யென்னை உலகினில் ஏசவும்
நின்னடிமை மனம் நிலையின்றி கூசவும் (ஆ)

ராக—இந்துஸ்தான் சாவேரி.

மனதுபுண்ணாக்கவோ மனம் கொண்டாய் வேலோனே
உனதுதிருவடியை உகந்துபணியுமெந்தன் (ம)

1 உன்னருளால்யானும் உகந்திங்கமர்ந்திட்டேன்
பின்னையேதோ துணையும் பேதையும் ஈடேற (ம)

2 உயர்தெய்வமென்றேயுனை உரைக்குதே நான்மறைகள்
அயர்ந்த போதாளாது அவதிகள் செய்வதேனோ (ம)

3 துஷ்டர்கள் இஷ்டத்தையோ தொடர்ந்தருள் செய்தி
டுவாய்
இஷ்டருக்குமே மிகுகஷ்டமோ தந்திடுவாய் (ம)

4 காலத்தின் கோலமோ கலியினது கூறோ
ஞாலத்தின் நீதியோ நாதனே சொல்லிடுவாய் (ம)

5 ஒருசுகம் காணேனே உலகினில் யான்வந்து
திருவுள்ளமிரங்கியே திருவடிசேர்த்திடுவாய் (ம)

6 சீக்கிரமென்னை யழைப்பாய் சீர்பெறு முருகோனே
ஆக்கினை போதுமையா அமர்த்திடாய் திருவடி (ம)

ராக—சங்கராபரணம்.

பல்லவி.

குலதெய்வமாம்—என்கோவேகுமார

அநுபல்லவி.

நலம்பெருகவே நான்நாளுமுன்னை துதித்தும்
பலமளித்திடாது—பன்முகமாமோ (குல)

சரணங்கள்.

அருள்வருநாளை அநுதினநோக்கி
அகற்றினேன்காலம் அவலமேயாக்கி
கதியொன்றுமின்றி கலங்குறேன் கந்தா
பதியானநீயும் பார்த்தருள் செய்யாது (குல)

ரா—இந்துஸ்தான்

பல்லவி.

முருகாஎன் அருகேநீயும் வருக வருக (வ)

சரணங்கள்.

1 உனைத்தேடி உலகெங்கும்ஓடி—வாடிடுமென்னைக்கூடிட (வ)

2 நீயும்வந்து யெந்தன்பந்துவாக—அருள் துளிசிந்திட (வ)

3 பாருஏழைமுகம்பாரு—கோருமென்னையாண்டிட (வ)

4 சிவகுருவே அருளுருவே—சிறியேனுறவே காத்திட (வ)

ரா—இந்துஸ்தான் ஜாவளி

பல்லவி

ஏறுமயிலேறு—இவ்வேழைமுன்வந்துசேரு
எந்தன் கவலைதீரு—எனக்கோர்மொழியும் கூறு

சரணங்கள்.

1 இன்னமும் அலையாது—இவ்வேழையும் சோராது
பின்னமொன்றுமில்லாது—பெருமானே அருள்தா (ஏ)

2 சித்தமிரங்கியேயிச்—சிறியேனைகண்ணோக்கி
உத்ததுணையாக—ஓர்வழியளித்திட (ஏ)

3 ஞானகுருவேயென்னை—நாடியேநீயும் வந்து
ஆனபதமுணர்த்தி—நின் அடிமலர் சேர்த்திட (ஏ)

---

1 அறியகுருமலைமீது திருமுருகனடிமலர்யான் கண்டதரு
ணம்—அடிச்சிறியேனுள மிருந்தேயுதித்த கொடிய
துவும்—தரியாது பட்டிடுமோ தரித்தேயுரமாகி தழைத்

திடுமோ—தங்கிடும் வெந்தாபத்தால் தவித்தேவதங்கிடுமோ—சரியான நன்னீர்சார்ந்து குளிர்த்திடுமோ—குளிர்த்தோடினும் சஞ்சலமாம் ஓணன் கடியாதிருந்திடுமோ—கடியாதிடினும் பெரிதானகொம்பேற்று பிடித்தெங்கும் படர்ந்திடுமோ—பெருமான்முருகன்மனமும் யானறியேனே

2 நீரூர்ந்தமேனியை நிலையாக நான்பணிந்ததருணம் அடிச்சிறியேனுள்ளோடிய கொடியரும்பும் சோருது மலர்ந்திடுமோசோர்ந்தேதான் வீழ்ந்திடுமோ—வீழாதிருந்திடினும் வீணுக்கியழிக்குமந்த வேருணமனப்புழுவும் வீணே யரித்திடுமோ வீசுமணம் நீங்கிடுமோ—நீங்காதிருந்திடினும் நிலைபெற்று அழகாக சிராகமலர்ந்திடுமோ—சிறப்பானநன்மணம் பெற்றிடுமோ—சிவகுருவின் சித்தமதை ஏதென்றறியேனே

3 வேலவனடிமலரை விரும்பியேநான்பணிந்த தருணம் இச்சிறியேனுளங்காய்த்த தொருநற்காயதுவும் மேனுறப்பழுக்குமோ மேவாதுவெம்பியழிந்திடுமோ அழியாதிருந்திடினும் அடித்திடும் கல்லடிகள் தாளாதுவிழ்ந்திடுமோ அலதுதரித்தங்கு நின்றிடுமோ தரித்திடினும் தாங்காதமனக்குரங் கதுவும் கேளாது கடித்திடுமோ—கண்படாதகன்றே கனிந்திடுமோ—கடவுள்முருகோன் கருணையதறிந்திலனே

4 குகப்பெருமானடி மலரைக்குளிர்ந்தேயான் கண்டதருணம் கொடுவினையகலயென்னகம் பழுத்தகனியதனை சுகமாக உண்பேனோ சோர்ந்திடவே வீழ்ந்திடுமோ—வீழாதிருந்திடினும் விலகிடாமனக்கள்ளனென் முகம் சோரப்பறித்திடுவனோ—பறியாது பதுக்கிடினும் நான் பதனமாயுண்பேனோ பகர்ந்திடு நெஞ்சடைத்திடுமோ

—அகம்குளிரப்பருகியே ஆனந்தமுற்றமர்வேனே —
ஆறுமுகன்சித்தமதை ஏதுமறிந்திலனே

ரா—கமாஸ்.

கொண்டோடிவாமயிலே—குமரன்குகனை

1 ஆலமுண்டோன்பாலன்—அழகுவேலவனை
கோலாகலத்துடன்—குதித்துக்கூத்தாடியே (கொ)

2 ஒருபதப்பொருளதின்—உண்மையுரைத்தோனின்
திருப்பாதம் தாங்கியே—தீம் தீம் தீமென்றாடி (கொ)

3 ஞானகுருவான—நாதன்பாதம் சுமந்து
ஆனபதமுனக்கு—அளித்தோம்—தோமென்றாடி (கொ)

4 சிவகுருவானோனை—சிந்திப்போர் நேசனை
தவம்பலித்திடவே—தாம்—தாம்—தாமென்றாடி (கொ)

ரா—திருப்புகழ் பாதி மதி நதி

1 சலம் விளங்கும் சடையோருளம் மகிழும் குலமணியாகும்
வலம் வந்தேநாம் நிலம்குனிந்து நலம் பெறவே பணிவோமே

2 நடம்புரிவோர் இடமமரும் மடமயிலினிரு கண்ணாகும்
கடமாறுமுன்திடம் பெறஅவனிடம் சென்றேநாம் பணிவோமே

3 மாரனெரித்த தீரக்கண்ணின் வீரஉருவும் அதுவாகும்
சார அருள் சோரமாயை ஏறஅன்பும் பணிவோமே

4 மலைமகட்கோர் மணியெனவந்த மறைபொருளுமதுவாகும்
கலைபெறுக வலையறுக நிலையுறுகப் பணிவோமே

3

5 புரமெரித்தபரம் பொருளும் சிரம் வணங்கும் உருவாகும்
கரமது கூப்பிவாழும் பெற்றிட திறமுடன் நாம் பணிவோமே

ரா—இங்கிலீஷ்நோட்.

1 வாழ்க வாழ்கவே—உலகெங்கும் வாழ்கவே
ஓதரிகுருமலையும்—வாழ்வளிக்க வாழ்கவே
வணங்கும் அன்பர்—வழிபெற்று—வழிபெற்று—வழி பெற்றுமே வாழ்கவே

2 ஆறெழுத்தும் வாழ்கவே அதன்கருத்தும் விளங்கவே
ஓதுமடியார் ஒளியைப்பெற்று உண்மையாக வாழ்கவே
திருநீறும்—திருந்தவே—திருந்தவே — திருந்தயெங்கும் காக்கவே

3 நான்மறையும் வாழ்கவே—நல்லறமும் வாழ்கவே
ஆவினெடு வேதியரும்—ஆனந்தமாய் வாழ்கவே
வேலும்—மயிலும்—விரும்பியே— விரும்பியே—விரும்பித்துணையாகவே

78944